# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண். 1 / 2016**

திரு. J.வேலாயுதம்
28, போஸ் தெரு,
ஓடத்துறை அஞ்சல்,
கவுந்தப்பாடி,
ஈரோடு – 638455. . . . . . . .. . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என் சாலை,
ஈரோடு – 638 009. . . . . . .. . . . . . எதிர்மனுதாரர்
(திரு. V. ரவிச்சந்திரன்,
உதவி செயற்பொறியாளர்/கவுந்தப்பாடி)

**கேட்புரை நாள் – 24.3.2016**

**ஆணை நாள் – 31.3.2016**

திரு.ஜெ. வேலாயுதம், ஓடத்துறை, ஈரோடு அவர்களின் 22.12.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.1/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.3.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதுரைகள், எதிர்மனுதாரர்

கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் அவரின் எழுத்துப்பூர்வமான வாதுரை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

60 நாட்களுக்கு மீட்டர் கணக்கெடுக்கும் பொழுது, 100 யூனிட்டுகளுக்கு ரூ.1/– வீதம் கணக்கிட்டு பின்னர், அதிகமுள்ள 10, 20 யூனிட்டுகளுக்கு ரூ.1.50 வீதம் கணக்கிட்டும் தனித்தனியே கணக்கீடு செய்து மொத்தமாக கூட்டி கட்டணத் தொகை செலுத்த உத்தரவு இட கோரியுள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 திரு. J.வேலாயுதம், ஓடத்துறை, அவர்கள் வீடுகளுக்கு உபயோகபடுத்தப்படும் மின்சாரம் இரண்டு மாத காலத்திற்கு 100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்பாடு இருந்தால், அதில் 100 யூனிட்டுகளுக்கு ரூ. 1 வீதமும், மீதமுள்ள யூனிட்டுகளுக்கு யூனிட்டுக்கு ரூ.1.50 வீதமும் கணக்கிட உத்தரவு இட வேண்டும் என்று ஈரோடு மின்பகிர் மாவட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 7.11.2015 நாளிட்ட மனுவை சமர்ப்பித்துள்ளார்.

2.2 மன்றம் தன்னுடைய தீர்வை 18.12.2015 நாளிட்ட உத்தரவில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை, மின் குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் ஆணை:

மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றகூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை, இருப்பினும், மனுதாரரின் கோரிக்கை மற்றும் அதற்குரிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை

ஆணையம், சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் விதிமுறைகள் ஆகியவற்றை நன்கு கூர்ந்து ஆராய்ந்து பார்த்ததில் மனுதாரர் திரு. J.வேலாயுதம், அவர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள வீடுகளுக்கான மின் பயனீட்டுக் கட்டணத்தை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை அவர்களின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டு Revised Tariff Order, Dated 11.12.2014 -ன் படி வீட்டு மின் இணைப்புகளுக்கு 0–100 யூனிட்டுகள் வரை மின் பயனீட்டுக் கட்டணம் ரூ.1.00/யூனிட்டு, 100 யூனிட்டுகளுக்கு மேல் 200 யூனிட்டுகள் வரை இரண்டு மாதக் கணக்கீட்டு முறைக்கான கால கட்டத்தில் பயன்படுத்துவோருக்கு 0–200 யூனிட்டுகள் வரை ரூ.1.50/யூனிட்டும், கணக்கீடு செய்யும் முறைக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவின் படிதான் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மேலும் மனுதாரர் மனுவில் கட்டணங்கள் தொடர்பான கோரிக்கையை தலைவர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 19A – ருக்குமணி லட்சுமிபதிசாலை (மார்செல் ரோடு), எழும்பூர், சென்னை – 600 008 அவர்களிடம் கோரலாம் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4.0 <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 தற்போது மின் கட்டணம் வீடுகளுக்கு 100 யூனிட்டுகள் வரை ரூ.1.00/– வீதம் 100 யூனிட்டுகளுக்கு மேல் ரூ.1.50 என கட்டணம் 60 நாட்களுக்கு வசூல் செய்யப்படுகிறது.

4.2 சாதாரணமாக ஏழை, எளிய மக்கள் வீட்டில் விளக்குகள், கிரைண்டர் போன்ற மின்சாதணங்கள் பயன்படுத்த குறைந்தபட்சம் மாதம் 100 யூனிட்டுகள் வீதம் 2 மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் தேவைப்படுகிறது. 100 யூனிட்டுகளுக்கு மேல் 10, 20 யூனிட்டுகள் சேர்ந்தாலும் கட்டணம் ரூ.1.50 வீதம் 120 யூனிட்டுகளுக்கும் வசூல் செய்கிறார்கள். இதனால் ஏழை, எளிய மக்கள் மின் கட்டணம் செலுத்த கஷ்டப்படுகிறார்கள்.

4.3 எனவே, 60 நாட்களுக்கு மீட்டர் கணக்கெடுக்கும் போது 100 யூனிட்டுகளுக்கு ரூ.1.00 வீதம் கணக்கிட்டும் பின்னர் அதிகமுள்ள யூனிட்டுகள் 10, 20, க்கு ரூ.1.50 வீதம் கணக்கிட்டும் தனிதனியே கணக்கிட்டும் மொத்தமாக கூட்டி கட்டண தொகை செலுத்த உத்திரவிட பணிவுடன் கோருகின்றார்.

4.4 இதனால் மின்கட்டணம் சிறிதளவு குறைய, ஏழை மக்கள் சிரமம் குறைய ஏதுவாக இருக்கும் என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறார்.

## 5.0 <u>மின்குறைதீர்ப்பாளின் கேட்புரை:</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளர் முன்பாக 24.3.2016 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேல்முறையீட்டாளர் தன்னுடைய 26.2.2016 நாளிட்ட மனுவில் அவர் 68 வயது ஆனவர், உடல் நலம் சரியில்லாதவர் என்பதால் அவரால் விசாரனையில் கலந்து கொள்ளமுடியாது என்றும் அவருடைய பதில் மனுவை பரிசீலித்து தகுந்த உத்தரவு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. V. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர், கவுந்தப்பாடி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

## 6.0 <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதம்:</u>

6.1 ஏழை, எளிய மக்கள், வீட்டு உபயோகத்திற்கு 60 நாட்களுக்கு குறைந்த பட்சம் 200 யூனிட்டுகள் மின்சாரம் தேவைப்படுகிறது. யூனிட்டுகள் 100க்கு மேல் 10, 20 யூனிட்டுகள் சேரும் பொழுது மின்கட்டணம் ரூ.1.50 வீதம் கணக்கிடப்படுகிறது.

6.2 எனவே யூனிட்டுகள் 100 வரை ரூ.1 வீதம் கணக்கிட்டும் அதிகமுள்ள 10, 20 யூனிட்டுகளுக்கு தனியே ரூ.1.50 வீதம் கணக்கிட்டும், இரண்டையும் கூட்டி கட்டணம் நிர்ணயம் செய்ய கோரியுள்ளார். இதனால் அவர்போன்ற ஏழை மக்களுக்கு கட்டணம் குறைய வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

7.0 <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 எதிர்மனுதாரரின் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்ட திரு. V. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர், கவுந்தப்பாடி அவர்கள், மின்சார கட்டணம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்படுகிறது என்றும், அந்த ஆணையிலுள்ள கட்டணங்கள் தான் மின்கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

7.2 தற்பொழுதுள்ள மின்கட்டணம், ஆணையத்தின் SMT Order 9 of 2014 dt.11.12.2014–ன் படிதான் அரசு தரும் மானியத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வசூலிக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

7.3 மேலும், மேல்முறையீட்டாளர், தெரிவித்துள்ளபடி, மின்கட்டணத்தை மாற்றியமைக்க மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தான் அதிகாரம் உள்ளது என்றும் வாரியத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் தெரிவித்தார்.

8. <u>எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வமான பதிலுரை :</u>

8.1 வீடுகளுக்கான மின் பயனீட்டுக் கட்டணத்தை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை அவர்களின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டு Revised Tariff Order dated 11.12.2014–ன் படி வீட்டு மின்இணைப்புகளுக்கு 0–100 யூனிட்டுகள் வரை மின் பயனீட்டுக் கட்டணம் ரூ.1.00/ யூனிட்டும், 100 யூனிட்டுகளுக்கு மேல் 200 யூனிட்டுகள் வரை இரண்டு மாதக் கணக்கீட்டு முறைக்கான கால கட்டத்தில் பயன்படுத்துவோருக்கு

0–200 யூனிட்டுகள் வரை ரூ.1.50/ யூனிட்டும், கணக்கீடு செய்யும் முறைக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவின் படிதான் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

**9.0 <u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு :</u>**

9.1 மேல்முறையீட்டாளர் தற்பொழுது மின்கட்டணம் வீடுகளுக்கு 100 யூனிட்டு வரை ரூ.1.00 வீதமும், 100 யூனிட்டுகளுக்கு மேல் ரூ.1.50 கட்டணம் என்று 60 நாட்களுக்கு வசூல் செய்யப்படுகிறது. அதனை 100 யூனிட்டு வரை யூனிட்டுக்கு ரூ.1.00 என்றும், 100க்கு மேல் பயன்படுத்தப்படும் யூனிட்டுகளுக்கு மட்டும் யூனிட்டுக்கு ரூ.1.50 என்ற கட்டண வீதத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

9.2 சாதாரண ஏழை எளிய மக்களின் வீட்டில் விளக்குகள் கிரைண்டர் போன்ற மின்சாதனங்களுக்கு பயன்படுத்த குறைந்தபட்சம் மாதம் 100 யூனிட்டுகள் வீதம் இரண்டு மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் தேவைப்படுகிறது. எனவே இரண்டு மாத பயன்பாட்டளவு 100 யூனிட்டுகளுக்கு அதிகமாக சென்றால் மொத்த பயன்பாடும் யூனிட்டு ஒன்றிற்கு ரூ.1.50 வீதம் மின் கட்டணம் வசூலிக்கப்படுவதால், மின்கட்டணம் செலுத்த ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுவதால், 100 யூனிட்டுகளுக்கு அதிகமாக உள்ள அந்த யூனிட்டுகளுக்கு மட்டும், யூனிட்டிற்கு ரூ.1.50 வீதமும், 100 யூனிட்டிற்குள் வரும் பயன்பாட்டிற்கு யூனிட்டிற்கு ரூ.1 வீதமும் கணக்கீடு செய்து, மொத்தத் தொகையை தனித்தனியாக கூட்டி வசூலிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

9.3 எதிர்மனுதாரர், மின்சார கட்டணம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் மின் கட்டணங்களின் படிதான் வாரியம் மின்கட்டணத்தை வசூல் செய்கிறது.

எனவே, கட்டண விதிப்பில் மேல்முறையீட்டாளர் கோரும் மாற்றம் வாரியத்தால் செய்யமுடியாது என்று வாதிட்டுள்ளார்.

9.4 மேல்முறையீட்டாளர் தெரிவிக்கும் கட்டணைவீதம் ஒழுங்குமுறை ஆணையத்தின் SMT Order No. 9 of 2014 dt. 11.12.2014 ன் படி தான் அரசு தரும் மானியத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தற்பொழுது நுகர்வோரிடம் வசூல் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

9.5 இது சம்பந்தமாக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் SMT Order No. 9 of 2014 dt. 11.12.2014 ன் பத்தி **6.10**–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 6.10. தாழ்வழுத்த மின்கட்டணம் I-A*

***xxxx xxxx xxxx***

| *மின் கட்டணம்* | *மின்நுகர்வு படிமுறை வீதங்கள்(slab) (யூனிட்டுகள்) கிலோவாட் மணியில் ஏற்ற இறக்க மற்றும் பட்டியலிடல் காலம் (ஒன்று அல்லது இரண்டு மாதங்கள்)* | *ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் ** | |
|---|---|---|---|
| | | *நிலைக்கட்டணங்கள் (மாதம் ஒன்றுக்கு) ரூ.* | *மின் திறன் கட்டணங்கள் (காசுகளில்) கிலோ வாட் மணியில்* |
| தாழ்வழுத்த மின்கட்டண வீதம் ***I-A*** | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 50 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை | *15* | *300* |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட்டுகள் முதல் 100 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 101 யூனிட்டுகள் முதல் 200 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | *15* | *325* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டுகள் முதல் 250 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | *20* | *350* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டு முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை | | *460* |

| | | | |
|---|---|---|---|
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | | *350* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டு முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுடுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை | *25* | *460* |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் அல்லது அதற்கு மேல் | | *660* |

** இவ்வகை மின்நுகர்வோருக்கு அரசால் மானியம் வழங்கப்பட வேண்டியது.*

9.6 அரசு தரும் மானியம் Lr. No. (Ms) No.01 dt. 5.2.2015 of Energy (A1) Department, கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 0–100 யூனிட்டுகள் (இரு மாதங்களுக்கு) | ரூ.2.00/ஒரு யூனிட்டுக்கு | நிலைக்கட்டணம் ரூ.5.00/மின்னிணைப்பு |
| 0–200 யூனிட்டுகள் (இரு மாதங்களுக்கு) | ரூ.1.75/ஒரு யூனிட்டுக்கு | நிலைக்கட்டணம் ரூ.5.00/மின்னிணைப்பு |
| 201 முதல் 500 வரையிலான யூனிட்டுகளின் முதல் 200 யூனிட்டுகளுக்கு (இரண்டுமாதம்) | ரூ.1.50 ஒரு யூனிட்டுக்கு | நிலைக்கட்டணம் ரூ.5.00/மின்னிணைப்பு |
| 201–முதல் 500 யூனிட்டுகளுக்கு (இரண்டு மாதம்) | ரூ.1.60 ஒரு யூனிட்டுக்கு | நிலைக்கட்டணம் ரூ.5.00/மின்னிணைப்பு |

9.7 அரசு அறிவித்துள்ள மேலேயுள்ள மானியத்தை கழித்தபின்பு நுகர்வோர் செலுத்த வேண்டிய மின் கட்டணம் கீழ்கண்டவாறு உள்ளது.

| *மின் கட்டணம்* | *மின்நுகர்வு படிமுறை வீதங்கள்(slab) (யூனிட்டுகள்) கிலோவாட் மணியில் ஏற்ற இறக்க மற்றும் பட்டியலிடல் காலம் (ஒன்று அல்லது இரண்டு மாதங்கள்)* | *ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் ** | | *அரசு வழங்கும் மானியம்* | | *மின் நுகவோர் செலுத்தவேண்டிய மின்கட்டணம்* | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | *நிலைக் கட்டணம்* | *மின் திறன்* | *நிலைக் கட்டணம்* | *மின் திறன்* |
| | | *நிலைக் கட்டணங்கள் (மாதம் ஒன்றுக்கு) ரூ.* | *மின் திறன் கட்டணங்கள் (காசுகளில்) கிலோ வாட் மணியில்* | *மாதம் ஒன்றுக்கு ரூ.* | *கட்டணங்கள் (காசுகளில்) கிலோவாட் மணியில்* | *மாதம் ஒன்றுக்கு ரூ.* | *கட்டணங்கள் (காசுகளில்) கிலோவாட் மணியில்* |
| தாழ்வழுத்த மின்கட்டண | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வீதம் ***I-A*** | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 50 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை | *15* | *300* | *5* | *200* | *10* | *100* |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட்டுகள் முதல் 100 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 101 யூனிட்டுகள் முதல் 200 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டுமாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | *15* | *325* | *5* | *175* | *10* | *150* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டுகள் முதல் 250 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | *20* | *350* | *5* | *150* | *15* | *200* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டு முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை | | *460* | | *160* | | *300* |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுடுகள் மற்றும் அதற்கு மேல் (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் மின்நுகர்வு ெ சய்யும் நுகர்வோருக்கு | | | | | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 200 யூனிட்டுகள் வரை | *25* | *350* | *0* | *0* | *25* | *350* |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டு முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 201 யூனிட்டுடுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை | | *460* | | *0* | | *460* |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் அல்லது அதற்கு மேல் | | *660* | | *0* | | *660* |

**9.8** இந்த மேல்முறையீட்டாளர், தெரிவித்துள்ள விதிக்கப்படும் கட்டணம், மேற்கண்ட அட்டவணையின்படி தான் உள்ளது என்று தெரிகிறது. எனவே, தற்பொழுது உரிமம்தாரரால் வசூலிக்கப்படும் மின் கட்டணம், ஆணையம் வழங்கிய SMT Order No. 9 of 2014 dt. 11.12.2014ல் அரசு அளித்துள்ள மானியத்தை கணக்கில் எடுத்துக் கொண்ட பின் செலுத்த வேண்டிய மின்கட்டணம் என்று அறியமுடிகிறது.

**8.9** மின்சார கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் உள்ள அமைப்பு எது என்பதை தெரிந்து கொள்ள நாம் மின்சார சட்டம் 2003–ன் பிரிவு 86(a)ஐ ஆராய வேண்டும். மின்சார சட்டம் 2003ன் பிரிவு 86(a) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"86. (1) The State Commission shall discharge the following functions, namely : -*

*(a) determine the tariff for generation, supply, transmission and wheeling of electricity, wholesale, bulk or retail, as the case may be, within the State :*

*Provided that where open access has been permitted to a category of consumers under section 42, the State Commission shall determine only the wheeling charges and surcharge thereon, if any, for the said category of consumers ; "*

**9.10** மேற்கண்ட மின்சார சட்டம் 2003 பிரிவு 86(a)ன் படி மின் உற்பத்திக்கான விலை, மின்சாரத்தை விநியோகிக்கும் விலை, ஒரு மாநிலத்திற்குள் மின் செலுத்துகை மற்றும் மின் சுமந்து செல்லல் ஆகியவற்றிற்கான கட்டணத்தை மொத்தம், பேரளவு அல்லது சில்லரை என்ற நிலைக்கு தகுந்தாற்போல் நிர்ணயிப்பது மாநிலத்தின் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று தெரிகிறது.

**9.11** மேலும், பிரிவு 42ன் படி திறந்த நுழைவுரிமைக்கு அனுமதி பெற்றுள்ள நுகர்வோர் பிரிவுக்கு மின் சுமந்து செல்லல் (wheeling charges) ஆகும் கட்டணம் அதற்கு விதிக்கப்படும் கூடுதல் கட்டணம் (surcharge) ஆகியவற்றை மட்டுமே ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும்.

**9.12** எனவே, மின்சார சட்டம் 2003 ன் பிரிவு 86(a) ன்படி, ஒரு மாநிலத்தின் ஒழுங்குமுறை ஆணையம் தான், மின்சார கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் படைத்தது ஆகும். எனவே,

உரிமம்தாரர், மின் கட்டணத்தை மாற்றம் செய்ய முடியாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

9.13 இந்த மேல்முறையீட்டாளர், தற்பொழுது வீடுகளுக்கு விதிக்கும் மின்கட்டணத்தில் மாற்றம் கோருகின்றார். தற்பொழுது வாரியம், விதிக்கும் மின்கட்டணம், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் SMT Order No. 9 of 2014 மற்றும் அரசு அளித்துள்ள மானியத்திற்கும் இணங்க தான் உள்ளது என்பதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

10. முடிவுரை :

10.1 மேற்கண்ட பத்தியிலுள்ள தீர்வின்படி, ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்யமுடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.1 / 2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. J.வேலாயுதம்
28, போஸ் தெரு,
ஓடத்துறை அஞ்சல்,
கவுந்தப்பாடி,
ஈரோடு – 638455.

2) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என் சாலை,
ஈரோடு – 638 009.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி. என் சாலை,
ஈரோடு – 638 009.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.